ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் |
| திகதி | 2020.07.03 |

## *கொவிட் -19 மூலம் பாதிக்கப்பட்ட 20,240 வியாபாரங்களுக்கென ரூ.53 பில்லியனுக்கு மத்திய வங்கி ஒப்புதலளித்துள்ளது*

மத்திய வங்கியானது இலங்கை அரசாங்கத்துடனான ஆலோசனையுடன் கொவிட்-19 நோய்த்தொற்றின் மூலம் மோசமாக பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு உரிமம்பெற்ற வங்கிகள் ஊடாக 4 சதவீத வட்டிவீதத்தில் தொழிற்பாட்டு மூலதனத்தினை வழங்குவதற்காக சௌபாக்யா கொவிட்-19 மறுமலர்ச்சிக் கடன் திட்டத்தினை அறிமுகப்படுத்தி நாட்டில் பொருளாதார நடவடிக்கை புத்துயிர் பெறுவதற்கு ஆதரவளிக்கின்றது. இக்கடன் திட்டமானது சுயதொழில் மற்றும் தனிப்பட்டவர்கள் உள்ளடங்கலாக ரூ. 1 பில்லியனுக்கு குறைவான வருடாந்த புரள்வுடன் கூடிய கொவிட்-19 மூலம் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்கு கிடைக்கப்பெறுகின்றது. 1 பில்லியன் வருடாந்த புரள்வு மட்டுப்பாடானது சுற்றுலா, ஏற்றுமதிகள் மற்றும் தொடர்புபட்ட ஏற்பாட்டுச்சேவை வழங்குதல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ள வியாபாரங்களுக்கு ஏற்புடையதாகாது.

மூன்று கட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இத்திட்டமானது ஆண்டுக்கு 4 சதவீத வட்டிவீதத்தில் தொழிற்பாட்டு மூலதன கடன்களின் மொத்தமாக ரூ. 150 பில்லியனைப் பகிர்ந்தளிக்குமென எதிர்பார்க்கின்றது. 2020 யூலை 02 ஆம் திகதி வரை கடன் திட்டத்தின் கீழ் 20,240 வியாபாரங்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்படவுள்ள மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட மொத்த தொழிற்பாட்டு மூலதனக் கடன் வசதிகள், ரூ. 53 பில்லியனை விஞ்சுகின்றன. இக்கடன்கள், 6 மாதங்களைக் கொண்ட சலுகைக் காலம் உள்ளடங்கலாக 24 மாதங்களைக் கொண்ட மீளச்செலுத்தும் காலப்பகுதியுடன் கூடிய ஆண்டுக்கு 4 சதவீத சலுகை வட்டிவீதத்தைக் கொண்டதாகும்.

2020 ஏப்பிறல் 01ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் திட்டத்தின் கட்டம் I இன் கீழ் மத்திய வங்கியானது ரூ. 28 பில்லியன் தொகையுடைய 13,926 கடன்களுக்கு ஒப்புதலளித்துள்ளது. ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களில், 2020 யூலை 02 ஆம் திகதி வரை நாடு முழுவதும் பாதிக்கப்பட்ட 10,270 வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்கள் மத்தியில் ரூ. 21 பில்லியனுக்கு மேல் உரிமம்பெற்ற வங்கிகள் ஏற்கனவே பகிர்ந்தளித்துள்ளன. 2020 யூன் 19ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்ட கடன் திட்டத்தின் கட்டம் II கீழ் மத்திய வங்கியானது 6,314 வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்ட ரூ. 25 பில்லியன் தொகையுடைய 6,314 கடன்களுக்கு ஒப்புதளித்துள்ளது (விபரங்களுக்கு அட்டவணை 1ஐப் பார்க்க).

கட்டம் I மற்றும் கட்டம் II இரண்டின் கீழும் ஒப்புதளிக்கப்பட்ட ரூ. 53 பில்லியனில் வர்த்தகப் பணிகள் மூலம் முன்னிலைப்படுத்தப்பட்ட பணிகள் துறையிலுள்ள வியாபாரங்களுக்கு 45 சதவீதம் வழங்கப்பட்டுள்ள அதேவேளை கைத்தொழில் மற்றும் வேளாண்மைதுறைகளிலுள்ள வியாபாரங்களுக்கு முறையே 38 சதவீதமும் 17 சதவீதமும் பகிர்ந்தளிக்கப்பட்டன (விபரங்களுக்கு அட்டவணை 2ஐப் பார்க்க).

மத்திய வங்கியானது உரிமம்பெற்ற வங்கிகளுடன் ஏற்கனவே கிடைக்கப்பெறுகின்ற மிகையான திரவத்தன்மையினைப் பயன்படுத்தி ஆண்டுக்கு 4 சதவீதத்தில் கடன்வழங்கலை துரிதப்படுத்தும் நோக்குடனும் தமது கடன் நம்பகத் தன்மைக்கு துணையளிப்பதற்கு பிணைய உறுதி இல்லாத வியாபாரங்களுக்காக போதிய நிதிப் பாய்ச்சல்களை உறுதிசெய்வதற்கும் 2020 யூலை 01ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் கொடுகடன் உத்தரவாதம் மற்றும் வட்டி உதவுதொகை என்பவற்றுடன் இக்கடன் திட்டத்தின் கட்டம் III இனை அறிவித்தது. அதற்கிணங்க, மத்திய வங்கியானது இறுதி கடன்பெறுநர்களின் பாரிய கொடுகடன் இடர்நேர்வுப் பங்கினை பகிர்ந்துகொள்கின்ற அதேவேளை அவர்களது நிதிச் செலவுகளைச் சமாளிப்பதற்கு வங்கிகளுக்கு ஆண்டுக்கு 5 சதவீதம் கொண்ட வட்டி உதவுதொகையொன்றினை வழங்குகின்றது. மத்திய வங்கியினால் வழங்கப்படும் கொடுகடன் உத்தரவாதமானது சிறிய கடன்களுக்காக 80 சதவீதத்திலிருந்து ஒப்பீட்டளவில் பாரிய கடன்களுக்கு 50 சதவீதம் வரையான வீச்சில் காணப்படுகின்றது.

கடன் திட்டத்தின் கீழ் கடன் விண்ணப்பங்களைத் தொடர்புடைய வங்கிகளுக்கு 2020 ஓகத்து 31ஆம் திகதி வரை சமர்ப்பிக்கலாம்.

**அட்டவணை 1: "சௌபாக்யா கொவிட்-19 மறுமலர்ச்சிக் கடன்வசதி" கடன் திட்டம்**

**2020.07.02 அன்றுள்ளவாறு இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதளிக்கப்பட்ட கடன்கள்**

| வங்கி | கட்டம் I | | கட்டம் II | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | தொகை (ரூ.மில்.) | எண்ணிக்கை | தொகை (ரூ.மில்.) | எண்ணிக்கை | தொகை (ரூ.மில்.) |
| அமானா வங்கி | 69 | 615 | - | - | 69 | 615 |
| இலங்கை வங்கி | 1,848 | 4,774 | 759 | 2,028 | 2,607 | 6,803 |
| கார்கில்ஸ் வங்கி | 11 | 95 | - | - | 11 | 95 |
| சிற்றி பாங்க் | 4 | 88 | - | - | 4 | 88 |
| கொமர்ஷல் வங்கி | 731 | 2,799 | 3,215 | 14,345 | 3,946 | 17,145 |
| டொயிஷ் பாங்க் | 6 | 140 | - | - | 6 | 140 |
| டிஎவ்சிசி பாங்க் | 442 | 969 | 132 | 336 | 574 | 1,305 |
| ஹபீப் பாங்க் | 1 | 25 | - | - | 1 | 25 |
| எச்டிஎவ்சி பாங்க் | 27 | 27 | - | - | 27 | 27 |
| அட்டன் நஷனல் வங்கி | 731 | 2,502 | 940 | 4,162 | 1,671 | 6,664 |
| எச்எஸ்பீசி பாங்க் | 17 | 363 | - | - | 17 | 363 |
| இந்தியன் வங்கி | 14 | 137 | - | - | 14 | 137 |
| இந்தியன் ஓவசிஸ் வங்கி | 2 | 27 | - | - | 2 | 27 |
| முஸ்லிம் கொமர்ஷல் பாங்க் | 14 | 164 | - | - | 14 | 164 |
| நஷனல் டெவலப்மன்ட் பாங்க் | 467 | 1,398 | 69 | 183 | 536 | 1,580 |
| நேஷன் ரஸ்ட் பாங்க் | 157 | 1,143 | 13 | 84 | 170 | 1,227 |
| பான் ஏசியா பாங்கிங் கோபரேஷன் | 195 | 510 | - | - | 195 | 510 |
| மக்கள் வங்கி | 3,687 | 4,896 | 545 | 1,217 | 4,232 | 6,112 |
| பப்பிளிக் பாங்க் பேர்க்காட் | 14 | 58 | - | - | 14 | 58 |
| பிரதேச அபிவிருத்தி வங்கி | 3,371 | 1,659 | - | - | 3,371 | 1,659 |
| சம்பத் வங்கி | 893 | 2,752 | 589 | 2,507 | 1,482 | 5,259 |
| சனச அபிவிருத்தி வங்கி | 719 | 692 | - | - | 719 | 692 |
| செலான் வங்கி | 436 | 1,616 | 50 | 413 | 486 | 2,029 |
| இலங்கை சேமிப்பு வங்கி | 5 | 34 | - | - | 5 | 34 |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 21 | 89 | - | - | 21 | 89 |
| சான்டற் சாட்டற் பாங்க் | 4 | 64 | - | - | 4 | 64 |
| ஸ்டேட் பாங்க் ஒப் இந்தியா | - | - | - | - | - | - |
| யூனியன் பாங்க் | 40 | 333 | 2 | 28 | 42 | 361 |
| **தொகை** | **13,926** | **27,969** | **6,314** | **25,303** | **20,240** | **53,272** |

அட்டவணை 2: "சௌபாக்யா கொவிட்-19 மறுமலர்ச்சிக் கடன்வசதி" கடன் திட்டம்

2020.07.02 அன்றுள்ளவாறு துறை ரீதியிலான வகைப்படுத்தல்

| துறை | விண்ணப்பங்கள் | | தொகை | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | ரூ. மில். | % |
| **வேளாண்மை** | **3,244** | **16%** | **8,957** | **17%** |
| பயிர்ச்செய்கை | 608 | 3.0% | 947 | 1.8% |
| பெருந்தோட்டம் | 467 | 2.3% | 2,956 | 5.5% |
| வேளாண்மைக் கைத்தொழில் | 1,315 | 6.5% | 3,038 | 5.7% |
| விலங்கு வளர்ப்பு | 270 | 1.3% | 722 | 1.4% |
| மீன் வளர்ப்பு | 451 | 2.2% | 987 | 1.9% |
| ஏனையவை | 133 | 0.7% | 307 | 0.6% |
| **கைத்தொழில்** | **6,610** | **33%** | **20,102** | **38%** |
| ஆடை | 1,872 | 9.2% | 4,724 | 8.9% |
| கட்டவாக்கம் | 2,286 | 11.3% | 6,149 | 11.5% |
| மென் பொறியியல் | 583 | 2.9% | 1,672 | 3.1% |
| இரசாயன அடிப்படையில் அமைந்தவை | 263 | 1.3% | 1,169 | 2.2% |
| தோல் மற்றும் இறப்பர் | 254 | 1.3% | 706 | 1.3% |
| அச்சிடல் | 317 | 1.6% | 1,276 | 2.4% |
| ஏனையவை | 1,035 | 5.1% | 4,406 | 8.3% |
| **பணிகள்** | **10,386** | **51%** | **24,213** | **45%** |
| சுற்றுலா | 1,674 | 8.3% | 4,815 | 9.0% |
| தொலைத்தொடர்பூட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் | 910 | 4.5% | 2,389 | 4.5% |
| வர்த்தகம் | 3,696 | 18.3% | 6,448 | 12.1% |
| ஏற்பாட்டுச்சேவைகள் | 602 | 3.0% | 2,147 | 4.0% |
| போக்குவரத்து | 1,231 | 6.1% | 1,952 | 3.7% |
| சுகாதார கவனிப்பும் ஆயுர்வேதமும் | 598 | 3.0% | 1,960 | 3.7% |
| கல்வி | 308 | 1.5% | 659 | 1.2% |
| பொழுதுபோக்கு | 358 | 1.8% | 802 | 1.5% |
| ஏனையவை | 1,009 | 5.0% | 3,041 | 5.7% |
| **மொத்தம்** | **20,240** | **100%** | **53,272** | **100%** |